

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

சன் குழுமத்திலிருந்து வெளிவரும்
தமிழகத்தின் No:1 காலை நாளிதழ்

### 5 நிமிடத்தில்

# இதய நோயை கண்டறியும் கருவி

## குடந்தையை சேர்ந்தவர் கண்டுபிடிப்பு

கும்பகோணம், அக். 24: ஐந்து நிமிடத்தில் இதய நோயை கண்டறியும் கருவியை குடந்தையை சேர்ந்தவர் கண்டுபிடித்துள்ளார்.

இ.சி.ஜி, எக்கோ, ஆஞ்சியோகிராம் மூலம் இதய நோய் கண்டறியப்பட்டது. இந்நிலையில் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே தியாகராஜபுரத்தை சேர்ந்த தியாகராஜன், அனு தம்பதியினரின் மகன் அரவிந்த் (30) போலோ கார்டியோ கிராம் என்ற புதிய கருவியை கண்டுபிடித்துள்ளார். இந்த கருவி நேற்று கும்பகோணம் நகர மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சுகாதார திருவிழாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

முதற்கட்டமாக 15 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இந்த கருவி வழங்கப்பட்டது.

இது குறித்து விஞ்ஞானி அரவிந்த் நிருபர்களிடம் கூறியதாவது, நான் சென்னை கிண்டி அண்ணா பொறியியல் கல்லூரியில் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் படித்துள்ளேன்.

சிறிய வயதில் இருதயத்தில் எனக்கு வால்வில் பிரச்னை இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட நான் இருதய நோயை ஆரம்பத்திலேயே கண்டறியவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டேன். அதன் பயனாக தற்போது கண்டறியப்பட்டுள்ள போலோ கார்டியோ கிராம் உதவியுடன் டாக்டர் பயன்படுத்தும் ஸ்டெதாஸ்கோப் மூலம் நோயாளியின் இருதயத்தை சோதித்தால் ஒருவிதமான முனுமுனுப்புடன் கூடிய சத்தம் கேட்கும். அதற்கு மர்மர் டாக் என்று பெயர். அதை படுத்து அவருக்கு எந்தவிதமான பிரச்னை என்பதை (இதயத்துடிப்பின் எண்ணிக்கை, துடிப்பின் ஒலி அளவு) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிரிண்டரில் இருந்து நகல் எடுத்துக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. 5 நிமிடத்தில் ஒருவருக்கு இருதய நோய் இருக்கிறதா இல்லையா என்பதை சோதனை செய்து கொள்ளமுடியும். நவம்பர் 2ம் தேதி சென்னையில் மருத்துவத்துறை செயலாளர் முன்னிலையில் அறிமுக விழா நடைபெற இருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் மாணவன் நான். இக்கருவியால் ஏழை, எளிய மக்கள் அதிக பணம் செலவிடாமல் இருதய நோய் கண்டறிந்து கொள்ளலாம். இந்த கருவிக்கான காப்புரிமையை பெற்றுள்ளேன். இவ்வாறு அரவிந்த் கூறினார்.



இதய நோயை 5 நிமிடத்தில் கண்டறியும் போலோ கார்டியோ கிராம் கருவியுடன் அரவிந்த். கீழ்படம்: போலோ கார்டியோ கிராம் கருவி

